தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

17.08.2013

**வாழை விவசாயிகள் அக். 15-க்குள் காப்பீடு செய்து கொள்ளலாம்**

வாழை விவசாயிகள் அக். 15-ம் தேதிக்குள் காப்பீடு செய்து கொள்ளலாம் என்று தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் எம். செல்வராஜு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பது: வாழைப் பயிருக்கு காப்பீடு செய்யப்படும் தொகைக்கு 7.8 சதவீதம் பிரிமியம் செலுத்த வேண்டும். அதாவது ரூ. 10,000-க்கு காப்பீடு செய்ய ரூ. 780 பிரிமியம் செலுத்தப்பட வேண்டும். இந்த பிரிமியத் தொகையில் வங்கிக் கடன் பெறும் விவசாயிகளுக்கு 50 சதவீத மானியமும், கடன் பெறாத சிறு, குறு விவசாயிகளுக்கு 55 சதவீத மானியமும், இதர விவசாயிகளுக்கு 50 சதவீத மானியமும் தமிழக அரசு மூலம் வழங்கப்படுகிறது.

காரீப் பருவத்துக்கு கடன் பெறும் விவசாயிகள் காப்பீடு செய்ய கடைசி நாள் நவ. 30-ம் தேதி. கடன் பெறாத விவசாயிகள் அக். 15-ம் தேதிக்குள் காப்பீடு செய்து கொள்ள வேண்டும்.

எனவே, வாழை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் தங்களது பகுதியில் உள்ள தோட்டக்கலை உதவி இயக்குநர், தோட்டக்கலை அலுவலர், தோட்டக்கலை உதவி அலுவலர் ஆகியோரைத் தொடர்பு கொண்டு காப்பீடு செய்து பயன்பெறலாம். மேலும், விவரங்களுக்கு இந்திய வேளாண் காப்பீட்டு நிறுவனத்தின் தஞ்சாவூர் ஒருங்கிணைப்பாளர் வி. பழனியப்பனை 94437 80661 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**வேளாண் மையங்களில் விதை நெல் இருப்பு வைக்க வலியுறுத்தல்**

வேளாண் விரிவாக்க மையங்களில் விதை நெல் இருப்பு வைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்நாடு காங்கிரஸ் தொழிலாளர் யூனியன் வலியுறுத்தியுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டில் இந்த அமைப்பின் மாவட்ட செயற்குழுக் கூட்டம் வியாழக்கிழமை நடைபெற்றது.

விவசாயத்துக்கு தேவையான விதை நெல், இடுபொருள்கள் போன்றவை வேளாண் விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒரத்தநாட்டில் உள்ள தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் கல்விக் கடன் விரைவாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அமைப்பின் ஒரத்தநாடு வட்டாரத் தலைவர் அருண்மொழி வர்மன் தலைமை வகித்தார். மாநில அமைப்புச் செயலர் சாந்தா ராமதாஸ், மாவட்டத் தலைவர் கோ. ராகவேந்திரதாசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**எண்ணெய் வித்து உற்பத்தி பயிற்சி**

ஆலங்குடி அருகேயுள்ள வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் எண்ணெய் வித்து உற்பத்தி பயிற்சி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையம் சார்பில் நடைபெற்ற பயிற்சிக்கு திருவரங்குளம் வேளாண்மை உதவி இயக்குநர் ராம. சிவக்குமார் தலைமை வகித்தார். குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை அலுவலர் எஸ். ராஜசேகரன், வம்பன் வேளாண்மை அறிவியல் நிலைய பண்ணை மேலாளர் நக்கீரன் ஆகியோர் எண்ணெய் வித்து பயிர்கள் சாகுபடிக்கான தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கமளித்தனர்.பயிற்சியில் விவசாயிகள் மற்றும் திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மாணவிகள் பங்கேற்றனர்.

**சாகுபடியைப் பெருக்க மண் ஆய்வு தீவிரம்**

நஷ்டத்தைத் தவிர்த்து பயிர் சாகுபடியை மேம்படுத்த நாமக்கல் மாவட்டம் முழுவதும் விளை நிலங்களின் மண் ஆய்வு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

நாமக்கல் மாவட்டத்தில் மொத்தமுள்ள 2.34 லட்சம் பண்ணைக் குடும்பங்களில் இதுவரை 1.76 குடும்பங்களின் விளை நிலங்களில் மண் பரிசோதனைக்கு எடுக்கப்பட்டுள்ளது.

உலகளவில் விவசாய உற்பத்தியில் இஸ்ரேல் முன்னிலை வகிக்கிறது. இதற்கு அந்த நாட்டின் சிறந்த நீர்ப்பாசன முறையே முக்கியக் காரணமாகும். மழையளவு குறைந்த அந்த நாட்டில் நீரை சிக்கனமாகப் பயன்படுத்தி பல்வேறு நவீன தொழில்நுட்ப உதவிகளுடன் மண்ணுக்கு ஏற்ற பயிரை மட்டும் சாகுபடி செய்வதால், பெருமளவில் விளைப் பொருள்கள் சாகுபடி செய்து பல்வேறு நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இதேபோல, தமிழகத்திலும் மண்ணுக்கு ஏற்ற பயிர்களை சாகுபடி செய்து, குறைந்த செலவில் அதிகளவில் விளைச்சலைப் பெருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் ஒருபகுதியாக, பயிர் மேலாண்மைத் திட்டத்தின் கீழ் விளை நிலங்களின் மண் பரிசோதனை செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின்படி, 2011-12ஆம் ஆண்டு முதல் மூன்று ஆண்டுகளுக்குள் அனைத்து மாவட்டங்களிலும் விளை நிலங்களின் மண் பரிசோதனை செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. இதையொட்டி, நாமக்கல் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில் இந்த மாவட்டத்தில் மொத்தம் 2,34,802 பண்ணைக் குடும்பங்கள் இருப்பது தெரிய வந்துள்ளது.

அனைத்துக் குடும்பங்களின் விளை நிலங்களிலும் மண் பரிசோதனை செய்து, அந்த மண்ணுக்கு ஏற்ற பயிர்கள், அதற்கேற்ற உரங்களின் அளவு, பருவம், நீர் தேவை, தொழில்நுட்பங்கள் குறித்தும் விரிவான அட்டைகள் அளிக்கப்பட உள்ளன. இதனடிப்படையில், இதுவரை 1,76,271 குடும்பங்களின் விளை நிலங்கள் மண் பரிசோதனைக்கு எடுத்துக்கப்பட்டுள்ளதாகவும், விரைவில் அந்தக் குடும்பங்களுக்கு பயிர் வாரியான திட்டம் அளிக்கப்பட உள்ளதாகவும் வேளாண்மைத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ஆர்.ராஜேந்திரன் கூறியது: மண்ணுக்கு ஏற்ற பயிர்களை மட்டும் சாகுபடி செய்வதன் மூலம் உரங்கள், நீர், தொழில்நுட்பங்கள், ஆள்கள் செலவைக் குறைத்து அதிகளவில் விளைச்சலைப்

பெற முடியும். இதற்காகவே மாவட்டம் முழுவதும் மண் பரிசோதனை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. நிகழ் நிதியாண்டு இறுதிக்குள் அனைத்து பண்ணைக் குடும்பங்களின் விளை நிலங்களுக்கும் மண் பரிசோதனை செய்து பயிர் வாரியான திட்டங்கள் அளிக்கப்பட்டுவிடும்.

மண் பரிசோதனை முடிவுகள் உடனுக்குடன் வேளாண்மைத் துறை இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும் என்பதால், விவசாயிகள் இணையதளத்தில் இருந்தும் விவரங்களை தெரிந்து கொள்ளலாம் என்றார் அவர்.

இதற்கிடையே, நாமக்கல் மாவட்டத்தில் நாமக்கல், திருச்செங்கோடு ஆகிய இரு இடங்களில் மட்டுமே மண் பரிசோதனை மையங்கள் உள்ளன.

இதனால், மாவட்டம் முழுவதும் விளை நிலங்களின் மண் பரிசோதனை செய்து அளிப்பதில் மிகுந்த சிரமம் ஏற்பட்டுள்ளது. அரசு உத்தரவுப்படி நிகழ் நிதியாண்டுக்குள் அனைத்து விளை நிலங்களுக்கும் மண் பரிசோதனை செய்து அளித்திடக் கூடுதலாக மண் பரிசோதனைக் கூடங்கள் ஏற்படுத்துவது அவசியம் என்று அந்தத் துறை அலுவலர்கள் தெரிவித்தனர்.

**நெல் விதை, தென்னங்கன்றுக்கு மானியம்**

நாமகிரிப்பேட்டை வட்டாரத்தில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மானியம் வழங்கப்படுவதாக வேளாண்மை உதவி இயக்குனர் கிருஷ்ணவேணி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாமகிரிப்பேட்டை வட்டாரத்தில் தற்போதுள்ள நீர் மற்றும் மழையைப் பயன்படுத்தி தென்னங்கன்றுகள் நடவு செய்ய உள்ளனர். தற்போது நாமகிரிப்பேட்டை வேளாண்மை விரிவாக்க மையத்தில் தென்னங்கன்றுகள், நெட்டை ரகங்கள் 950, குட்டை ரக தென்னங்கன்று 950 உள்ளன. நெட்டை ரக தென்னங்கன்றுகளுக்கு 50 சதம் மானியம் அல்லது மரம் ஒன்றுக்கு ரூ.7.50-ம் குட்டை ரகத்துக்கு 50 சதம் மானியம் அல்லது ரூ.15-ம் வழங்கப்படும்.

தேவைப்படும் விவசாயிகள் நாமகிரிப்பேட்டை வேளாண் உதவி இயக்குனர் அலுவலகத்தில் முன்னுரிமை  பதிவேட்டில் பதிவு செய்து கொள்ளலாம்.

அதேபோல, முள்ளுக்குறிச்சி பிர்காவில் உள்ள விவசாயிகள் நெல் நாற்று நடுவதற்கு விவசாயிகள் தயாராகி வருகின்றனர். அவர்களுக்குத் தேவையான வெள்ளை பொன்னி, ஏ.டி.டி., 45 சான்று பெற்ற நெல் ரகங்கள் சுமார் 1000 கிலோ விதைகள் நாமகிரிப்பேட்டை வேளாண் விரிவாக்க மையம், முள்ளுக்குறிச்சி துணை வேளாண் விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம், நெல் இயக்கத் திட்டத்தின் கீழ் ரூ.5 மானியத்திலும், விதை கிராமத் திட்டத்தின் கீழ் 50 சதம் மானியத்திலும் நெல் விதை கிடைக்கும். மேலும், திருந்திய நெல் சாகுபடி முறையில் நெல் பயிரிடும் விவசாயிகளுக்கும் மானியம் வழங்கப்பட உள்ளது.

எனவே, விவசாயிகள் நாமகிரிப்பேட்டை வேளாண் அலுவலகத்தில் உள்ள முன்னுரிமை பதிவேட்டில் பதிவு செய்து பயன் பெறலாம் என அதில் கூறப்பட்டுள்ளது.

**தருமபுரியில்  மழை**

தருமபுரியில் வெள்ளிக்கிழமை இரவு மழை பெய்ததால் மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

தருமபுரியில் வெள்ளிக்கிழமை மாலை வரை எந்தவொரு அறிகுறியும் தென்படாத நிலையில், இரவு 7 மணியளவில் மழை பெய்யத் தொடங்கியது.

ஒரு மணி நேரத்திற்கும் மேலாக இந்த மழை நீடித்தது. இதனால், தருமபுரியில் மானாவாரிப் பயிர்களான துவரை, பருப்பு உள்ளிட்டவற்றைப் பயிரிட்டுள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**வறட்சி நிவாரணம் வழங்க விவசாயிகள் கோரிக்கை**

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் வறட்சி நிவாரணம் வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

திருவண்ணாமலை மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற

கூட்டத்துக்கு, மாவட்ட ஆட்சியர் அ.ஞானசேகரன் தலைமை வகித்தார். இதில், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் பலர் கலந்து

கொண்டு பேசினர்.

மாவட்டத்தில் நுண்ணூட்ட கலவை உரத்தை அனைத்து இடங்களிலும் தரமாக விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். மாவட்டத்தின் அனைத்து கிராமங்களிலும் வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும். மதகுகளில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்ய வேண்டும். வேளாண் விற்பனை நிலையங்களில் விதை மற்றும் உரங்களை தேவையான அளவுக்கு இருப்பு வைக்க வேண்டும்.

மழைக்காலம் நெருங்குவதால் குடிநீர் தேக்கத் தொட்டிகளை சுத்தமாக பராமரிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டும். கிராமப்புறங்களுக்கு இயக்கப்படும் பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்பன உள்பட பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

இதையடுத்துப் பேசிய ஆட்சியர் அ.ஞானசேகரன், விவசாயிகளின் அனைத்து கோரிக்கைகளும் உரிய முறையில் பரிசீலிக்கப்பட்டு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் ச.வளர்மதி, வேளாண் இணை இயக்குநர் பன்னீர்செல்வம், கூட்டுறவுத் துறை இணைப் பதிவாளர் திருகுண அய்யப்பதுரை, ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சந்திரசேகரன் மற்றும் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

**வேலூர் மாவட்டத்தில்  பரவலாக பலத்த மழை**

வேலூர் மாவட்டத்தில் பரவலாக வெள்ளிக்கிழமை பலத்த மழை பெய்தது.

வேலூர், காட்பாடி, அணைக்கட்டு உள்ளிட்ட பகுதிகளில் காலை முதல் மேகமூட்டம் காணப்பட்டதை அடுத்து வெயிலின் தாக்கம் இல்லை. இந்நிலையில், பிற்பகலில் பலத்த மழை பெய்தது. அதேபோல் மாலையில் சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக பலத்த மழை பெய்ததால் குளிர்ந்த காற்று இரவு வீசத் தொடங்கியது. இம்மழையால் மாவட்டத்தில் நிலத்தடி நீராதாரம் உயர வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

ஆம்பூரில் கனமழை: ஆம்பூரில் வெள்ளிக்கிழமை மாலை கனமழை பெய்தது.

வெள்ளிக்கிழமை பிற்பகலில் இருந்தே லேசான சாரல் மழை விட்டுவிட்டு பெய்து கொண்டேயிருந்தது. மாலை சுமார் 5 மணிக்கு திடீரென கனமழை பெய்யத் தொடங்கி ஒரு மணி நேரத்திற்கும் மேலாக விடாமல் தொடர்ந்து பெய்து கொண்டேயிருந்தது.

ஆம்பூர் நேதாஜி சாலை, பூக்கடை பஜார், காதர்பேட்டை சந்திப்பு, கந்தபொடிக்காரத் தெரு உள்பட நகரின் பல்வேறுப் பகுதிகளில் மழைநீர் சாலையில் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கியது.

**சென்னை பெருநகர காய்கறி அபிவிருத்தி திட்டம் அரக்கோணம் அருகே காய்கறி சேகரிப்பு மையம்**

ரூ.17 கோடியில் நிறைவேற்றப்பட இருக்கும் சென்னை பெருநகர காய்கறி அபிவிருத்தி திட்டத்துக்காக அரக்கோணம் அருகே கீழ்வீதியில் காய்கறி சேகரிப்பு மையமும், அதை நிர்வகிக்க விவசாயிகள் குழுவும் அமைக்கப்பட உள்ளதாக தமிழக அரசின் வேளாண்துறை முதன்மை செயலர் சந்தீப் சக்சேனா தெரிவித்தார்.

அரக்கோணத்தை அடுத்த நெமிலி அருகே உள்ள கீழ்வீதியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்துக்கு பிறகு தமிழக அரசின் வேளாண்துறை முதன்மைச் செயலர் சந்தீப் சக்சேனா, தோட்டக் கலைத் துறை ஆணையர் சத்யவிரத சாஹு, வேளாண் விற்பனைத்துறை ஆணையர் அனில் மேஷ்ரம் ஆகியோர் கூட்டாக கூறியதாவது:

சென்னை பெருநகர காய்கறி தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு அருகில் உள்ள மாவட்டங்களில் காய்கறி சாகுபடி செய்யும் ஆர்வமுள்ள விவசாயிகளை ஒருங்கிணைத்து காய்கறி உற்பத்தியாளர்கள் குழு அமைத்து, உற்பத்தி செய்யப்படும் காய்கறிகளை இடைத்தரகர்கள் இல்லாமல் தங்கள் விளைபொருள்களை நேரடியாக விற்பனை செய்து பலன் அடையும் பொருட்டு இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

நல்ல தரமான காய்கறிகளை விநியோகம் செய்வதால் நுகர்வோர்களும் பலன் அடைவார்கள். இந்த நோக்கத்துக்காக வேலூர் மாவட்டத்தில் நெமிலி, மாதனூர், காட்பாடி, கே.வி.குப்பம், நாட்டறம்பள்ளி, ஆலங்காயம் மற்றும் வேலூர் ஆகிய

ஊராட்சி ஒன்றியங்களில் இதுவரை 1031 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு 56 காய்கறி உற்பத்தியாளர்கள் குழு அமைக்கப்பட்டுள்ளன. அனைத்துக் குழுக்களும் தனித்தனியாக இயங்கும். அவர்களுக்கு தனித்தனியாக வங்கிகளில் கணக்கும் துவங்கப்பட்டுள்ளது.

ஏழு வட்டாரங்களில் சராசரியாக ஆண்டுக்கு 1175 ஹெக்டேர் பரப்பில் 23500 மெட்ரிக் டன் காய்கறிகள் உற்பத்தி செய்யப்பட உள்ளன. இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் காய்கறிகளை சேகரித்து பெருநகரங்களுக்கு அனுப்ப நான்கு இடங்களில் சேகரிப்பு மையம் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளன. நெமிலி வட்டாரத்தில் கீழ்வீதி, திருமாதலம்பாக்கம், மாதனூர் அருகே சான்றோர்குப்பம், நாட்டறம்பள்ளி அருகே கொத்தூர் ஆகிய இடங்களில் இந்த மையங்கள் அமையும்.

இதில் முதலாவதாக நெமிலி வட்டாரத்தில் உள்ள கீழ்வீதி சேகரிப்பு மையம் செப்டம்பர் மாதம் முதல் செயல்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் வெண்டைக்காய், கத்தரிக்காய், மிளகாய் பயிரிடப்பட்டு வருகிறது. தினமும் 4 டன் காய்கறி சேகரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இம் மையத்தை கோடம்பாக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள விவசாயிகள் குழுவினர் பராமரிக்க உள்ளனர். இக்குழுவுக்கு காய்கறிகளை ஏற்றிச்செல்ல வேன், எடை போட தராசு, தார்பாய், பிளாஸ்டிக் கூடைகள் வாங்க ஏற்பாடு செய்யப்படும்.

காய்கறி உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு உயர் விளைச்சல் காய்கறி உற்பத்தி மற்றும் வீரிய ரக காய்கறி உற்பத்திக்கு 75 சதவீத மானியத்தில் ஹெக்டேருக்கு ரூ.30 ஆயிரம் கடன் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் கீழ் விவசாயிகளுக்கு பல்வேறு மானியக் கடன்கள் வழங்கப்பட உள்ளன என்றனர்.

வேளாண்துறை உயர் அதிகாரிகளுடன் வேலூர் மாவட்ட ஆட்சியர் பொ.சங்கர், மாவட்ட வேளாண் துறை இணை இயக்குநர் ஆர்.ஜெயசுந்தர், வேளாண் வணிகத் துறை துணை இயக்குநர் தனசேகரன், தோட்டக் கலைத் துறை துணை இயக்குநர் அற்புதம், கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் வெங்கடேசன் ஆகியோரும் வந்திருந்தனர்.

**கீழ்பவானி வாய்க்காலில் தண்ணீர் திறக்காததால் விவசாயிகள் வேதனை**

கீழ்பவானி வாய்க்காலில் தண்ணீர் திறக்கப்படாதது குறித்து விவசாயிகள் வேதனை தெரிவித்துள்ளனர்.

ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்கால், திருப்பூர் மாவட்டம், முத்தூர் அருகே மங்களப்பட்டி வரை செல்கிறது. இதன் மூலம் 2 லட்சத்து 7 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. இதில் கரும்பு, நெல், மஞ்சள் உள்ளிட்டவை பயிர் செய்யப்படுகிறது.

ஆண்டு தோறும் ஆகஸ்ட் 15-சுதந்திர தினத்தன்று இந்த வாய்க்காலில் தண்ணீர் திறப்பது வழக்கம்.  இந்த ஆண்டும் வழக்கம் போல் வாய்க்காலில்  தண்ணீர் திறக்கப்பட்டு நெல் நடவு செய்யப்படும் என விவசாயிகள் நம்பிக்கையுடன் இருந்தனர். ஆனால் வாய்க்காலில் தண்ணீர் திறந்து விடப்படாததால் விவசாயிகள் கடும் வேதனை அடைந்துள்ளனர்.

இது குறித்து கீழ்பவானி விவசாயிகள் சங்கத் தலைவர் செ.நல்லசாமி கூறியது: ஆண்டு தோறும் ஆகஸ்ட் 15-இல் கீழ்பவானி வாய்க்காலில் தண்ணீர் திறந்து விடுவது வழக்கம். ஆனால் இந்த ஆண்டு காளிங்கராயன் வாய்க்காலில் 5 மாதத்திற்கு தண்ணீர் திறந்துள்ளனர். நெல்லுக்கு நான்கு மாதம் தண்ணீர் இருந்தால் போதும். இருந்தும் அதிக அளவில் திறந்துள்ளனர். ஆனால் சட்டப்படி முழு உரிமை பெற்ற கீழ்பவானி வாய்க்காலில் இதுவரை தண்ணீர் திறக்கவில்லை. அதிகாரிகளை கேட்டால் பணிகள் நடந்து வருகிறது என்று கூறுகின்றனர்.

தற்போது பவானிசாகர் அணைக்கு போதிய தண்ணீர் வந்துள்ளது. ஆனாலும், கீழ்பவானி வாய்க்காலில் தண்ணீர் திறந்து விடாமல் தாமதம் செய்து வருகின்றனர். காவிரி நடுவர் மன்ற தீர்ப்பின்படி அதிகாரிகள் சரியாக நீர் மேலாண்மை செய்யாமல் தொடர்ந்து குளறுபடி செய்து வருகின்றனர். தமிழக முதல்வர் விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, உடனடியாகக் கீழ் பவானி வாய்க்காலில் தண்ணீர் திறந்து விட உத்தரவிட வேண்டும். இதன் மூலம் பல லட்சம் விவசாய குடும்பங்கள் பயன் பெறும் என்றார்.

இது குறித்து விவசாயிகள் தரப்பில் கூறியது: ஆகஸ்ட் 15-இல் தண்ணீர் வரும் என்று நம்பி உழவுப் பணிகளை செய்ய எங்கள் பூமியைத் தயார் செய்து வந்தோம். ஆனால் இன்னும் தண்ணீர் திறக்கப்படாமல் இருப்பது ஏமாற்றத்தை அளிக்கிறது.

கடந்த சில ஆண்டுகளாக வறட்சியால் நாங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகிறோம். எனவே, விவசாயிகள் நன்மை அடையும் வகையில் தமிழக முதல்வர் உடனடியாகத் வாய்க்காலில் தண்ணீர் திறந்துவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**தாராபுரத்தில் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்**

கட்சி சார்பற்ற தமிழக விவசாயிகள் சங்கத்தின் சார்பில் தாராபுரத்தில் வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

நகராட்சி அலுவலகம் முன்பு நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்திற்கு சங்கத்தின் மாவட்ட தலைவர் ஏ. காளிமுத்து தலைமை வகித்தார். கொள்கைபரப்புச் செயலாளர் கி. ஆறுமுகம் வரவேற்றார். மாநிலத் தலைவர் என்.எஸ். பழனிசாமி, மாநிலப் பொருளர் என்.கே.டி. பொன்னுசாமி, வட்டாரத் தலைவர் ஓ.என். கதிர்வேல் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில், வறட்சியால் பாதிக்கப்பட்ட திருப்பூர் மாவட்ட விவசாயிகளுக்கு முறையாக நிவாரணம் வழங்க வேண்டும். தாராபுரம் நகராட்சி வாரச்சந்தையில் விவசாயிகள் தாங்கள் கொண்டு வரும் காய்கறிகளை இருப்பு வைத்து விற்பனை செய்ய நகராட்சியால் ஒதுக்கப்பட்ட இடம் தற்போது தனியார் சிலரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இதனை உடனடியாக அகற்ற வேண்டும்.

நகராட்சி வாரச்சந்தையில் அரசு நிர்ணயித்துள்ள சுங்கத் தொகையைவிட கூடுதலாக வசூலிக்கப்படுவதைத் தடுக்க வேண்டும். கடந்த ஆண்டு கூட்டுறவு வங்கிகளில் பெறப்பட்ட நகைக்கடன் மற்றும் பயிர், கால்நடைக் கடன்களை தள்ளுபடி செய்வதுடன் புதிதாக பயிர்க் கடன் வட்டியில்லாமல் வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

குண்டடம் வட்டாரத் தலைவர் பி.வி. சாமிக்கண்ணு நன்றி கூறினார்.

**வைகை அணையில் கூடுதலாக தண்ணீர் திறப்பு**

திருமங்கலம், மேலூர் குடிநீருக்காக, வெள்ளிக்கிழமை முதல் வைகை அணையில் இருந்து கூடுதலாக 600 கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

முல்லைப் பெரியாறு மற்றும் வைகை அணைக்கு நீர்வரத்து குறைந்து கொண்டே வருவதால், இந்த அணைகளில் இருந்து திறந்து விடப்படும் நீரின் அளவும் குறைக்கப்பட்டு வருகிறது.

சில நாள்களாக, பாசனத்துக்காக 1000 கனஅடியும், ஆண்டிபட்டி-சேடபட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் மதுரை குடிநீருக்காக 60 கனஅடியும் என மொத்தம் 1060 கனஅடி தண்ணீர் வைகை அணையிலிருந்து திறந்துவிடப்பட்டு வருகிறது.

தற்போது, திருமங்கலம் மற்றும் மேலூர் பகுதிகளில் குடிநீர் தட்டுப்பாடு நிலவி வருகிறது. எனவே, இப்பகுதி குடிநீருக்காக தண்ணீர் திறந்து விடவேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டது.

அதையடுத்து, திருமங்கலம் மற்றும் மேலூர் குடிநீருக்காக கூடுதலாக 600 கனஅடி தண்ணீர் என மொத்தம் 1,660 கனஅடி தண்ணீர் வெள்ளிக்கிழமை முதல் வைகை அணையில் இருந்து திறந்து விடப்பட்டுள்ளது.

அணைகளின் நீர்மட்டம்

வைகை அணை:

நீர் மட்டம் - 57.41 அடி (71)

நீர் வரத்து - 1,428 கனஅடி

நீர் வெளியேற்றம் - 1660 கனஅடி

முல்லைப் பெரியாறு:

நீர் மட்டம் - 128.90 அடி (152)

நீர் வரத்து - 780 கனஅடி

நீர் வெளியேற்றம் - 1,859 கனஅடி

**உண்மையான விவசாயிகள் இழுத்தடிப்பு, போலி ஆவணங்களுக்கு கடன்**

மதுரை மாவட்டம், திருவாதவூர் மற்றும் திருமங்கலம் பகுதியில் போலி ஆவணங்களின்பேரில் விவசாயக் கடன் வழங்கப்படுவதாகவும், உண்மையான விவசாயிகள் இழுத்தடிக்கப்படுவதாகவும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பங்கேற்ற விவசாயிகள் இப் புகாரைத் தெரிவித்தனர். மாவட்ட ஆட்சியர் எல்.சுப்பிரமணியன் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார். மாவட்ட வருவாய் அலுவலர் ஆர்.பி.ரவீந்திரன், வேளாண் இணை இயக்குநர் ஜெய்சிங் ஞானதுரை ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக் கூட்டத்தில் பங்கேற்ற விவசாயிகள் பேசியது:

உரம், பூச்சிகொல்லி மருந்துகள் விலை உயர்வு ஒருபுறம் இருந்தாலும், கடைகளில் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது. அதேநேரம், இடுபொருள் விலை, விவசாய வேலையாள் கூலி ஆகியவற்றைக் கணக்கிடும்போது விவசாயக் கடன் மிகக் குறைந்த அளவுக்கே வழங்கப்படுகிறது. தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் ரூ.148 கூலி நிர்ணயம் செய்யப்பட்டிருந்தாலும், பெரும்பாலான ஊராட்சிகளில் ரூ.30-லிருந்து ரூ.40 மட்டுமே வழங்கப்படுகிறது. வேலை உறுதித் திட்டத்தில் பெண்களுக்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள பணி விளிம்பை பாதியாகக் குறைக்க வேண்டும்.

மேலூர், வாடிப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் வறட்சி காரணமாக தென்னை மரங்கள் காய்ந்துபோய்விட்டன. அவற்றுக்கு இழப்பீடு கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்கெனவே வறட்சி நிவாரணத்துக்கு கணக்கீடு செய்தபோது, உண்மையான விவசாயிகள் பலருக்கும் நிவாரணம் கிடைக்காமல் போய்விட்டது. அவ்வாறு இல்லாமல் உண்மையான பாதிப்பை கணக்கீடு செய்ய கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அறிவுறுத்த வேணடும்.

மேலூர் தாலுகா திருவாதவூரில் போலி ஆவணங்களுக்கு விவசாயக் கடன் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், உண்மையான விவசாயிகள் வங்கிக் கடன் பெற இழுத்தடிக்கப்படுகின்றனர். வங்கிக் கடனுக்காக ஒரே கிராமத்துக்கு இருவேறு கிராம நிர்வாக அலுவலர்கள் சிட்டா அடங்கல் வழங்கியுள்ளனர்.

அலங்காநல்லூர் தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு நடப்பு ஆண்டுக்கு நிர்ணயிக்கப்பட்ட அளவைக் காட்டிலும், குறைந்த அளவுக்கே கரும்பு பயிரிடப்பட்டுள்ளது. அதிலும், தனியார் ஆலைகளுக்கு கரும்பு கடத்திச் செல்லப்படுகின்றன. இதைத் தடுக்கும் ஆலை அலுவலர்கள் மிரட்டப்படுகின்றனர். இதேநிலை நீடித்தால் கூட்டுறவு சர்க்கரை ஆலை மூட வேண்டிய நிலைக்குத் தள்ளப்படும் என்றனர்.

விவசாயிகளின் புகார்களுக்குப் பதில் அளித்து ஆட்சியர் சுப்பிரமணியன் பேசியது:

போலி ஆவணங்களுக்கு வங்கிக் கடன் வழங்கியுள்ளதாகக் கூறப்படும் புகார் குறித்து முன்னோடி வங்கி மேலாளர் தலைமையில் தனிக் குழு அமைத்து விசாரணை நடத்தப்படும். அதேபோல, கரும்பு கடத்தப்படுவதைத் தவிர்க்க வருவாய், வேளாண்மை, காவல் துறையினரைக் கொண்ட குழு அமைத்து நடவடிக்கை எடுக்கப்படும்.

வேலை உறுதித் திட்டத்தைப் பொருத்தவரை, பயனாளிகள் மேற்கொண்ட பணி அடிப்படையிலேயே வழங்கப்படுகிறது. சில இடங்களில் காலை 11 மணிக்கே ஓய்வு எடுக்கச் சென்று விடுகின்றனர். இன்னும் சில இடங்களில் ரூ.130-க்கும் மேல் கூலியாகப் பெறுகின்றனர். கூலி குறைவாக வழங்கப்படும் ஊராட்சிகளில், ஊரக வளர்ச்சித் துறையின் ஓவர்சீயர்கள் மூலமாக ஆய்வு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதேபோல, ஒவ்வொரு வாரமும் கூலி பட்டுவாடா செய்வது உறுதி செய்யப்பட்டுள்ளது என்றார்.

**டெல்டா விவசாயிகளுக்கு பயிர்க்கடன் வழங்க வேண்டும்**

சம்பா சாகுபடிக்காக காவிரி டெல்டா பாசன மாவட்ட விவசாயிகளுக்கு பயிர்க் கடன் வழங்க வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எம்.எல்.ஏ. கே.பாலகிருஷ்ணன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து முதல்வர் ஜெயலலிதாவுக்கு அவர் வெள்ளிக்கிழமை எழுதிய கடிதத்தில் கூறியிருப்பதாவது:

கொள்ளிடம் ஆற்றில் மட்டும் சுமார் 20 டி.எம்.சி. நீர் கடலுக்குள் சென்றுள்ளது. பொதுப்பணித் துறை அதிகாரிகள் சற்று முன்னெச்சரிக்கையாக இருந்திருந்தால் ஒரு பகுதி தண்ணீரைப் பயன்படுத்தி இருக்க

முடியும்.

மேட்டூர் தண்ணீர் கீழணைக்கு வரும் வரை கால்வாய் தூர்வாரும் பணிகள் அறவே நடைபெறவில்லை.

இப்போது வழக்கமான தண்ணீர் வந்தாலும் எளிதில் செல்ல முடியாத அளவுக்கு பாசன வடிகால் வாய்க்கால்களில் செடிகள் மண்டி, பல இடங்களில் மண் சரிந்து மோசமான நிலையில் உள்ளது.

காவிரியின் உபரி நீரை சேமித்துப் பயன்படுத்த காவிரியிலும், கொள்ளிடத்திலும் சுமார் 15 கதவணைகள் கட்டி தேக்கி வைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் மூலம் 20 டி.எம்.சி. தன்ணீரை தேக்க முடியும்.

கொள்ளிடம் ஊற்று நீரை தேக்கி வடக்கு ராஜன் வாய்க்கால் மூலம் கான்சாகிப் வாய்க்கால் மூலம் பாசனத்துக்கும், குடிநீருக்கும் பயன்படுத்த கொள்ளிடத்தில் அணை கட்ட வேண்டும்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு கடந்த ஆண்டு, அரசே பிரீமியம் செலுத்தி பயிர்க் காப்பீடு செய்தது. இந்த காப்பீட்டுத் தொகையை பழைய கடனில் வரவு வைக்காமல் உடனே வழங்க வேண்டும்.

வறட்சி நிவாரணம் பெற்றவர்களுக்கு மட்டுமே பயிர்க் கடன் மத்திய காலக் கடனாக மாற்றப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தி சம்பா சாகுபடி பணிகளைத் தொடங்க கூட்டுறவு மற்றும் அரசுடைமை வங்கிகளில் பயிர்க் கடன் வழங்க ஆவன செய்ய வேண்டும் என்று கே.பாலகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

**தமிழகத்தில் இன்று மழை வாய்ப்பு**

தமிழகம் மற்றும் புதுவையின் சில பகுதிகளில் சனிக்கிழமை மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வெப்பச்சலனத்தின் காரணமாகவும் வளி மண்டல மேல் அடுக்கில் ஏற்பட்ட சுழற்சியின் காரணமாகவும் தமிழகத்தில் பல இடங்களில் மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் சனிக்கிழமையும் மழை பெய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வானிலை முன்னறிவிப்பு: வட தமிழகம் மற்றும் புதுவையின் சில இடங்களில் சனிக்கிழமை மழை பெய்யும். தென் தமிழகத்தில் ஆங்காங்கே மழை பெய்யும்.

சென்னையை பொருத்தவரையில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது.

இந்த நிலையில் வெள்ளிக்கிழமை காலை வரையிலான நிலவரப்படி தமிழகத்தில் பதிவான மழை அளவு (மி.மீ.): நெய்வேலி, தொழுதூர் - 40, ஏற்காடு, காஞ்சிபுரம், மகாபலிபுரம், பரங்கிப்பேட்டை, தளி, செம்பரம்பாக்கம், பூந்தமல்லி - 30, தாமரைப்பாக்கம், திருவள்ளூர், உத்திரமேரூர், விருத்தாசலம் - 20, சீர்காழி, காவேரிப்பாக்கம், குடியாத்தம், பூண்டி, ஆத்தூர், வாழப்பாடி, செங்கல்பட்டு, கல்பாக்கம், தேன்கனிக்கோட்டை, கிருஷ்ணகிரி, தேவலா - 10.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**17.08.2013**

## வரத்து குறைவால் பூக்கள் விலை உயர்வு

ஈரோடு: வரலட்சுமி நோன்பு, ஆடிவெள்ளியை முன்னிட்டு, கடந்த இரண்டு நாட்களாக பூக்களின் விலை உயர்ந்து காணப்பட்டது. கடந்த வாரம் கிலோ, 120 ரூபாயாக இருந்த மல்லிகைப்பூ, நேற்று முன்தினம் வரலட்சுமி பண்டிகையை முன்னிட்டு கிலோ, 600 ரூபாயாக உயர்ந்தது. நேற்று விலை சற்று குறைந்து, 400 ரூபாயானது. சத்தியமங்கலம், கோபி, சேலம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து பூக்கள் மார்க்கெட்டுக்கு வரத்தானது. இந்தாண்டு நிலவிய கடும் வறட்சியால், பூக்கள் விளைச்சல் குறைந்தது. பண்டிகை மற்றும் முகூர்த்த சீஸனில் தேவை அதிகரிப்பால் விலை உயர்ந்து காணப்படுகிறது. நேற்று மல்லிகை கிலோ, 400 முதல், 600 ரூபாய், முல்லை, 280, அரளிப்பூ, 120, மருகு கட்டு, 10 ரூபாய்க்கு விற்றது. விலை அதிகமானபோதும், வரலட்சுமி நோன்பு மற்றும் கடைசி ஆடி வெள்ளியை முன்னிட்டு, கடந்த இரண்டு நாட்களில் விற்பனை நன்றாக இருந்ததாக, வியாபாரிகள் தெரிவித்தனர்.

## தேயிலை வரத்துஅதிகரிக்க வாய்ப்பு

பருவமழையால் தேயிலை வரத்து படிப்படியாக அதிகரித்து வருகிறது. தென் மேற்கு பருவமழை மஞ்சூர் பகுதிகளில் பரவலாக பெய்தது. தேயிலை தோட்டங்களுக்கு நல்ல ஈரப்பதம் கிடைத்தது. கடந்த ஒரு வாரமாக பகல் நேரத்தில் வெயிலான காலநிலை நிலவி வருகிறது. மழை, வெயிலால் நல்ல சீதோஷ்ண நிலை கிடைத்து வருவதால் தேயிலை தோட்டங்களை
விவசாயிகள் உரம் இட்டு பராமரித்து வருகின்றனர். கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் நாளொன்றுக்கு 10 ஆயிரம் கிலோவிலிருந்து 15 ஆயிரம்

கிலோ வரைக்கு கொள்முதல் செய்யப்படுகிறது. மாத இறுதியில் தேயிலை வரத்து மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

### மானிய விலையில் மிளகாய் விதை விற்பனை: அதிகாரி

லாலாப்பேட்டை: "கிருஷ்ணராயபுரம் வட்டாரத்தில் 50 சதவீத மானிய விலையில், மிளகாய் விதைகள் விவசாயிகள் விநியோகம் செய்யப்படுகிறது' என, வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் ராஜேந்திரன் தெரிவித்தார்.

அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் உள்ளதாவது:

ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், 50 சதவீத மானிய விலையில், காய்கறி விதைகள் விநியோகம் செய்யப்படுகிறது. கே-1 மிளகாய் விதைகள் உயரமாக வளரக்கூடியது. இதன் வயது 200 முதல் 210 வரை நாட்கள் ஆகும். மிளகாய் திரட்சியாக நீளமாக இருக்கும். ஆறு முதல் ஏழு செ.மீ., பழத்தில் 70 முதல் 75 விதைகள் இருக்கும், ஹெக்டேருக்கு 1.8 மெட்ரிக் டன் உலர்ந்த காய்கள் மகசூல் கொடுக்ககூடியது.

கே-1 மிளகாய் விதை தேவைப்படும் விவசாயிகள் சிந்தலவாடி பிர்க்கா உதவி அலுவலரை 9688868318 என்ற எண்ணிலும், பஞ்சப்பட்டி பிர்கா தோட்டக்கலை உதவி அலுவலரை 9750392904 என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### விவசாயிகள் மகிழ்ச்சி

ஸ்ரீபெரும்புதூர்:தொடர் மழையால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து, வேளாண் பணிகளை துவக்கி உள்ளனர்.ஸ்ரீபெரும்புதூர் ஒன்றியத்தில், 58 ஊராட்சிகள் உள்ளன. இங்கு, பிச்சிவாக்கம், எடையார்பாக்கம், மதுரமங்கலம், மேல் மதுரமங்கலம், குணகரம்பாக்கம், காந்தூர், ராமானுஜபுரம், பொடவூர், கீர நல்லூர் ஆகிய கிராமங்களில், விவசாயிகள் விவசாயம் செய்து வருகின்றனர்.ஆடிபட்டத்தில், நெற்பயிரை செய்துள்ளனர். கடந்த இரண்டு நாட்களாக, பெய்து வரும் மழையால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மேலும், பல விவசாயிகள், சம்பா சாகுபடிக்கான பணிகளை துவக்கி உள்ளனர்.

### அறுவடை நேரத்தில் தொடர்மழை

உத்திரமேரூர்:புள்ளம்பாக்கம் கிராமத்தில், அறுவடைக்கு தயார் நிலையில் இருந்த, 30 ஏக்கர் நெற்பயிர்கள் மழையால் சேதமாகி, நீரில் மூழ்கின.கடந்த சில தினங்களாக, காஞ்சிபுரம் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில், விட்டு விட்டு மழை பெய்து வருகிறது. இதனால், விவசாயிகள் ஒரு புறம் மகிழ்ச்சி அடைந்தாலும், ஒரு சில இடங்களில் இந்த மழை காரணமாக விவசாயிகள் பாதிப்புக்குள்ளாகி உள்ளனர்.உத்திரமேரூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட, புள்ளம்பாக்கம் கிராமத்தில், கடந்த இரு தினங்களுக்கு முன், சூறாவளி காற்றுடன் பொழிந்த மழையில், அப்பகுதியில் அறுவடைக்கு தயார் நிலையில் இருந்த, 30 ஏக்கர் நில நெற்பயிர்கள் சாய்ந்து, நீரில் மூழ்கி சேதமாயின.இதனால், அறுவடை செய்ய வேண்டிய பக்குவத்தில் விளைந்த நெல் மணிகள், முளைத்தும், நிலத்தோடு சிதைந்தும் வீணாகின. ஒரு சில விவசாயிகள், கிடைத்தது வரை லாபம் என, இயந்திரம் மூலம் அறுவடை செய்யும் முயற்சியில் இறங்கினர்.இதுகுறித்து, புள்ளம்பாக்கம் கிராமத்தை சேர்ந்த விவசாயிகள் கூறுகையில், "உழைப்பை மூலதனமாய் செலுத்தியது மட்டும் இல்லாமல் உழவு, நாற்று, நடவு, மருந்து என, ஆயிரக்கணக்கில் செலவு செய்து பயிர் செய்தோம். அறுவடை நேரத்தில் காற்றுடன் மழை பெய்ததால் நெற்பயிர்கள் சேதமடைந்து நஷ்டம் ஏற்பட்டுள்ளது' என்றார்.

### 10 டி.எம்.சி., காவிரி நீர் வீண் :சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு ஆர்வமில்லை

மேட்டூர் அணையில் இருந்து, டெல்டா பாசனத்திற்காக திறந்துவிடப்பட்ட காவிரிநீர், 10 டி.எம்.சி., அளவிற்கு வீணாகி உள்ளது.நீர்வழித் தடங்களின் மோசமான நிலையும், முன்கூட்டியே சம்பா சாகுபடியை துவக்க விவசாயிகள் ஆர்வம் காட்டாததும், இதற்கு முக்கிய காரணங்களாக கூறப்படுகின்றன.10 டி.எம்.சி.,இந்த ஆண்டு, கர்நாடகாவில் வெளுத்து வாங்கிய தென்மேற்கு பருவமழையால், வறண்டு கிடந்த மேட்டூர் அணை மளமளவென நிரம்பியது. இதை

அடுத்து, இந்த மாதம், 2ம் தேதி, டெல்டா பாசனத்திற்காக, மேட்டூர் அணை திறக்கப்பட்டது. இந்த தண்ணீர், 4ம் தேதி கல்லணைக்கு வந்தது.அதிகப்படியான நீர்வரத்தால், கல்லணையில் இருந்து, காவிரி, வெண்ணாறு மற்றும் கல்லணை கால்வாய் வழியாக தண்ணீர் திறக்கப் பட்டது.இந்த வகையில், கடந்த, 4ம் தேதி முதல் 9ம் தேதி வரை, கல்லணையில் இருந்து, காவிரியில், 3 டி.எம்.சி., நீர்; வெண்ணாற்றில், 1.5 டி.எம்.சி., நீர்; கல்லணை கால்வாயில், 1.20 டி.எம்.சி., நீர் அனுப்பப்பட்டது. ஆனால், இதே காலகட்டத்தில், மேட்டூரில் இருந்து, 15.5 டி.எம்.சி., நீர் திறந்துவிடப்பட்டது. குறிப்பிடப்பட்ட நீர்வழித் தடங்களில் திறந்து விடப்பட்டது தவிர, மீதம், 10 டி.எம்.சி., நீர் எங்கே போனது? மோசமான நிலை கடந்த ஆண்டுகள் நிலவிய வறட்சியால், இந்த நீர்வழி தடங்களின் கரைகள் காய்ந்து பலவீனமாக இருந்தன. மேலும், புதர் மண்டியதால் நீரோட்டத்திலும் சிக்கல் ஏற்பட்டது. இதனால், கல்லணை கால்வாயில் ஒரு இடத்தில் உடைப்பு ஏற்பட்டது. இதே போல் மற்ற வழித்தடங்களிலும் உடைப்பு ஏற்படும் அபாயம் ஏற்பட்டது. இதனால், கல்லணையில் இருந்து உள்ளாறு வழியாக, 5 டி.எம்.சி., தண்ணீரும், முக்கொம்பில் இருந்து, 5 டி.எம்.சி., தண்ணீரும் கொள்ளிடம் ஆறு வழியாக, வங்க கடலில் வீணாக வெளியேற்றப்பட்டது. இந்த வீணடிப்பு ஒரு புறம் இருக்க, பாசனத்திற்கு திறந்து விடப்பட்ட நீரில், பெரும் பகுதியும் வீணாகி உள்ளது.ஆர்வமில்லைஇந்த ஜூன் மாதம், மேட்டூர் அணை வறண்டு கிடந்ததால், குறுவை சாகுபடிக்கு, தண்ணீர் திறக்கப்படவில்லை.நிலத்தடி நீராதாரங்களை பயன்படுத்தி, குறுவை சாகுபடி செய்த, 1 லட்சம் விவசாயிகளுக்கு, இலவச பாசன குழாய் மற்றும் உரங்களை அரசு வழங்கியது. தற்போது, வழக்கமான சம்பா பருவத்திற்கு முன்பே, மேட்டூர் அணை திறந்து விடப்பட்டதால், டெல்டா மாவட்டங்களில், 12 லட்சம் ஏக்கரில் சம்பா சாகுபடி நடக்கும் என, அரசு கணக்கிட்டு உள்ளது. ஆனால், தண்ணீர் திறக்கப்பட்டு, 10 நாட்கள் கடந்த நிலையில், இந்த மாவட்டங்களில் இன்னும், 20 சதவீத அளவிற்கு கூட சம்பா

சாகுபடி துவங்கவில்லை. நிலத்தடி நீராதாரங்களை பயன்படுத்தி குறுவை சாகுபடி செய்த விவசாயிகள் தான், சம்பா சாகுபடிக்கு திறக்கப்பட்ட, காவிரிநீரை ஓரளவுக்கு பயன்படுத்துகின்றனர். இதனால், சம்பா சாகுபடிக்கு முன்கூட்டியே திறக்கப்பட்ட தண்ணீர், பயன்படாமல் வீணாகி வருகிறது. காத்திருப்பு சம்பா சாகுபடியை முன்கூட்டியே துவங்கினால், வடகிழக்கு பருவமழை நேரத்தில், பாதிப்பு ஏற்படும் என்பதால், இந்த முடிவை விவசாயிகள் எடுத்துள்ளனர். வங்கி கடன் வாங்கிய விவசாயிகள் சிலர் ஆர்வமாக சாகுபடியை துவங்கிஉள்ளனர். பயிர் பாதிக்கப்பட்டாலும், காப்பீடு மூலம் அவர்களுக்கு இழப்பீடு கிடைக்கும் என்பதே இதற்கு காரணம். இதுகுறித்து, தஞ்சாவூர் மாவட்டம் மேல உளூர் கிராமத்தை சேர்ந்த விவசாயி, பாலசுந்தரம் கூறியதாவது: நாங்கள், 110 முதல் 120 நாள் வரையிலான, நெல் ரகங்களை சாகுபடி செய்கிறோம். இப்போது சாகுபடி துவங்கினால், வடகிழக்கு பருவமழை, உச்சத்தில் இருக்கும்போது, பயிர்கள் நன்கு வளர்ந்த நிலையில் இருக்கும். அவை, மழையில், வளைந்து, தண்ணீர் வற்றிய, பின் மீண்டும் முளைப்பெடுத்து வீணாகிவிடும். இதனால், நஷ்டத்திற்கு ஆளாக நேரிடும். செப்., மாத துவக்கத்தில் நாற்று நட்டால், வடகிழக்கு பருவ மழையின் போது, சிறிய அளவில் பயிர்கள் இருக்கும். மழை தண்ணீரில் ஒரு வாரம் மூழ்கி கிடந்தாலும், பயிர்களுக்கு பாதிப்பு வராது. எனவே தான், முன் கூட்டியே சாகுபடி செய்ய ஆர்வம் காட்டவில்லை. இனிமேல் தான் நிலத்தை உழுது சாகுபடி ஏற்பாடுகளை துவங்க உள்ளோம். இவ்வாறு, அவர் கூறினார்."விரைவில் துவங்கும்'இதுகுறித்து, வேளாண் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: விவசாயிகள் இப்போது, கிடைக்கும் தண்ணீரை பயன்படுத்தாமல், காலம் தாழ்த்தி சாகுபடியை துவங்கினாலும் எந்த பிரச்னையும் இருக்காது. டெல்டா மாவட்டங்களில், சம்பா சாகுபடி, இந்தாண்டு அமோகமாக நடக்கப்போவது உறுதி. அடுத்த மாதத்திற்கு பின், சாகுபடி நடக்காமல், காலியாக உள்ள, ஒரு சென்ட் இடத்தை கூட பார்க்க முடியாது. அரசின் சாகுபடி பரப்பளவு மற்றும் உற்பத்தி இலக்கை, மிஞ்சுவதற்கும் வாய்ப்பு அதிகம் உள்ளது. அதற்கான

ஏற்பாடுகளை நாங்கள் செய்து வருகிறோம். இவ்வாறு அவர் கூறினார். திட்டங்கள் எங்கே? வழக்கமாக செப்டம்பர் அல்லது அக்டோபர் மாதத்தில் துவங்கும் சம்பா சாகுபடிக்கு, முன்கூட்டியே நீர் திறந்துவிட்டாலும், அதை டெல்டா பகுதிகளில் சேமித்து வைக்க, போதுமான கட்டமைப்புகள் இல்லாததால் தான் விலைமதிக்க முடியாத நீரை வீணடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டு உள்ளது. நீர்வழித் தடங்களை சீராக பராமரித்து, அவற்றில் தேவைக்கேற்ப தடுப்பணைகள் மற்றும் கதவணைகள் கட்டி இருந்தால், கிடைத்த நீரை சேமித்து வைத்து, சம்பா சாகுபடிக்கு பயன்படுத்துவதோடு, நிலத்தடி நீரை உயர்த்துவதற்கும் பயன்படுத்தி இருக்கலாம்.90 ஆயிரம் ஏக்கருக்கு பாசனம் செய்திருக்கலாம்ஒரு டி.எம்.சி., நீர், ஒரு பருவத்தில், 6,000 ஏக்கரில் உள்ள நெற்பயிருக்கு போதுமானது. இந்த வகையில் வீணான, 10 டி.எம்.சி., நீர், 60 ஆயிரம் ஏக்கருக்கான பாசனத்திற்கு, போதுமானதாக இருந்திருக்கும். இது கடந்த, 9ம் தேதி வரையிலான வீணடிப்பு கணக்கு மட்டும் தான். 9ம் தேதிக்கு மேல் மேட்டூரில் இருந்து, 30 டி.எம்.சி., நீர் திறந்துவிடப் பட்டு இருக்கலாம் என, பொதுப்பணி துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். அதன்படி, மொத்தம், 15 டி.எம்.சி., வரை கடலில் கலந்து வீணாகி இருக்க வாய்ப்பு உள்ளது; இப்படி வீணாகி இருந்தால், 90 ஆயிரம் ஏக்கருக்கான பாசன நீர் வீணானதாக கருத்தில் கொள்ளலாம்.

## சிறப்பான பருவமழையால் விதை, ரசாயனம் விற்பனை அமோகம்

புதுடில்லி:நடப்பு கரீப் பருவத்தில், நாடு தழுவிய அளவில், பல மாநிலங்களில் சிறப்பான அளவில் மழை பொழிவு இருந்து வருகிறது. இதையடுத்து, நடப்பு நிதியாண்டின் முதற்காலாண்டில், விதைகள் மற்றும் வேளாண் ரசாயனங்கள் விற்பனை சிறப்பாக அதிகரித்துள்ளது என, ஆய்வு நிறுவனம் ஒன்றின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

**பூச்சி கொல்லிகள்:**இதற்கு எடுத்துக்காட்டாக, வேளாண் வித்துக்கள் மற்றும் பூச்சி கொல்லிகள், உரம் உள்ளிட்ட வேளாண் ரசாயன பொருட்கள் உற்பத்தி மற்றும்

விற்பனையில் ஈடுபட்டு வரும் நிறுவனங்களின் விற்பனை வளர்ச்சி அதிகரித்துள்ளது. காவேரி சீடு கம்பெனி,மான்சான்டோ இந்தியா,அத்வந்தா இந்தியா,பேயர் கிராப் சைன்ஸ், இன்செக்டிசைட்ஸ் இந்தியா,தானுக்கா அக்ரிடெக், ராலிஸ் இந்தியா உள்ளிட்ட பல நிறுவனங்களின் விற்பனை, நடப்பு நிதியாண்டின் முதற்காலாண்டில், இரட்டை இலக்க வளர்ச்சி கண்டுள்ளதாக தெரியவந்துள்ளது. நடப்பாண்டு, ஜூன் மாதம் முதல் ஆகஸ்ட் 14ம் தேதி வரையிலுமாக, தெற்கு -தென்மேற்கு பருவமழை சராசரி அளவை விட, கூடுதலாக, 13 சதவீதம் பெய்துள்ளது.

**நிலக்கடலை:**நடப்பு கரீப் பருவத்தில், நிர்ணயிக்கப்பட்ட நிலப்பரப்பில், நான்கில் மூன்று பகுதி அளவிற்கு, சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது.கடந்த ஆண்டை விட, நடப்பு பருவத்தில், சோயா, நிலக்கடலை போன்ற எண்ணெய் வித்துக்கள், பருத்தி, பருப்பு வகைகள் போன்றவற்றின் சாகுபடி பரப்பளவு பன்மடங்கு அதிகரித்துள் ளது.மகாராஷ்டிரா, ஆந்திரா ஆகிய மாநிலங் களில் பருவ மழை அதிகரிப்பால், பூச்சி தாக்குதல்கள் அதிகம் காணப்பட்டதாகவும், இதை கட்டுப்படுத்தும் வகையில், மேற்கண்ட மாநிலங்களில், பூச்சி மருந்து விற்பனை, சிறப்பான அளவில் அதிகரித்து உள்ளது.

அதே போன்று, பல மாநிலங்களில், தானிய விதைகளுக்கான தேவை அதிகரித்ததை அடுத்து, இவற்றின் விற்பனையும் நல்ல அளவில் இருந்ததாக புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**17.08.2013**

## விதை விற்பனை நிலையத்தில் அதிகாரிகள் குழு ஆய்வு

ஊட்டி: நீலகிரி மாவட்டத்தில் உள்ள விதை விற்பனையாளர்கள், விதை விற்பனை செய்ய உரிமம் பெற்றுள்ளார்களா, விதைகள் இருப்பு விவரம், விதைகளின் விலை விவரம் அறிவிப்பு பலகைகளில் குறிப்பிட்டுள்ளதா என ஆய்வு மேற்க்கொண்டனர். விலை விற்பனை பட்டியலில் விவசாயிகளின் கையொப்பம் பெற்று வழங்கப்படுகிறதா, விதைகளின் ரகம், குவியல் எண், காலாவதி நாள் ஆகியவற்றை குறிப்பிட்டு வழங்கப்படுகிறதா என அனைத்து விற்பனை நிலையங்களிலும் விதை ஆய்வுதுணை இயக்குநர் தலைமையில் விதை ஆய்வு குழுவினர் ஆய்வு மேற்க்கொண்டனர்.

ஆய்வின் போது, அனைத்து விதை கொள்கலனிலுள்ள விபர அட்டையும், ஓபல் பச்சை நிறத்துடன் விவர அட்டை எண், பயிர் ரகம், குவியல் எண், நிகர எடை, உற்பத்தியாளர் பெயர், முகவரி, நஞ்சுக் கலக்கப்பட்டிருந்தால், நஞ்சின் பெயர், பயிரிடப்பட்ட உகந்த இடங்கள் பருவம் ஆகியவை விவர அட்டையில் தெரிவிக்க வேண்டும் எனவும், முரணான தகவல்கள் அச்சிடப்படக் கூடாது எனவும் விற்பனையாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

## கூலியை உயர்த்தி வழங்கக்கோரி கறிக்கோழி பண்ணையாளர்கள் மாநிலம் முழுவதும் வேலைநிறுத்தம்



வேலூர்: கோழி வளர்ப்புக்கான கூலியை உயர்த்தி வழங்கக்கோரி தமிழகம் முழுவதும் கோழி பண்ணையாளர்கள் நேற்று முதல் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். தமிழகம் முழுவதும் நேற்று முதல் கறிக்கோழி வளர்ப்பு விவசாயிகள் சங்கம் மற்றும் கோழி பண்ணையாளர்கள் சங்கங்களின் சார்பில் காலவரை யற்ற வேலை நிறுத்தப் போராட்டம் தொடங்கியுள்ளது. கறிக்கோழி வளர்க்கும் விவசாயிகளுக்கு ஒரு கிலோ கோழி வளர்ப்புக்கு ரூ.16 வழங்க வேண்டும். ஒரு கோழிக்கு வருடத்திற்கு 5 போனஸ் வழங்க வேண்டும். கோழி குஞ்சுகள் வருடத்திற்கு 5 பேட்ஜ்கள் வழங்க வேண்டும். கோழி குஞ்சுகள் 40 கிராம் எடையுடனும், தீவனம் ஐஎஸ்ஐ முத்திரையுடன் வழங்க வேண்டும். பேச்சுவார்த்தை நடத்திட நிறுவனங்கள் முன்வர வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை அவர்கள் முன்வைத்துள்ளனர்.

இந்த வேலை நிறுத்த போராட்டத்தின்போது, தமிழ்நாட்டில் உள்ள கறிக்கோழி வளர்ப்பு விவசாயிகள் அனைவரும் பண்ணைகளில் கோழியை ஏற்றப்படாது என்றும் கோழி குஞ்சுகள் பண்ணைகளில் இறக்கப்படாது என்றும் அறிவித்துள்ளனர்.இதுகுறித்து தமிழ்நாடு கறிக்கோழி வளர்ப்பு விவசாயிகள் சங்கத்தின் மாநில தலைவரான ஜி.லதா கூறியதாவது: தமிழகத்தில் 1 கிலோ கோழி வளர்ப்புக்கு 3.25 கூலி உயர்த்தி தருவதாக கோழிக் குஞ்சு நிறுவனங்கள் 2010ம் ஆண்டு ஒப்பந்தம் போட்டனர். ஆனால் இதுவரை ரூ.3 வரை மட்டுமே அளித்து வருகின்றனர். தற்போது ஒரு கிலோ இறைச்சி 140 முதல் 240 வரை நிர்ணயம்

செய்து விற்பனை செய்யப்படுகிறது. எனவே கோழி வளர்ப்பு கூலியை 16 ஆக உயர்த்தி வழங்க வேண்டும் உள்ளிட்ட 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். தனியார் நிறுவனங்கள் பேச்சுவார்த்தை நடத்தும்வரை இந்த போராட்டம் தொடரும். இவ்வாறு அவர் கூறினார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**17.08.2013**

**கடமலை-மயிலை ஒன்றியத்தில் தண்ணீர் பற்றாக்குறையால் கருகும் தென்னை மரங்கள்**

கடமலைக்குண்டு

கடமலை-மயிலை ஒன்றியத்தில் வறட்சி காரணமாக ஆயிரக்கணக் கான தென்னை மரங்கள் கருகிவிட்டது. வைகை ஆறு உற்பத்தியாகும் இந்த பகுதியில் நிலத்தடி நீரைபெருக்க தேவையான நடவடிக்கை களை அரசு செய்ய வேண்டும் என்று விவசாயி கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



வறட்சிப் பகுதிகள்

தேனி மாவட்டம், கடமலை- மயிலை ஒன்றியம் விவசாயம் சார்ந்த பகுதியாகும். வைகை ஆறு கடமலை-மயிலை ஒன்றி யத்திற்கு உட்பட்ட மலைப் பகுதியில் இருந்துதான் உற்பத் தியாகி ஓடுகிறது. வைகை ஆற்றில் ஒவ்வொரு ஆண்டும் 3 மாதங்களுக்கு மட்டுமே தண்ணீர் வரத்து இருக்கும். மற்ற மாதங்களில் இப்பகுதியில் மேற்கொள்ளப் படும் விவசாய பணிகளுக்கு நிலத்தடிநீரையே விவசாயிகள் முழுமையாக நம்பியுள்ளனர்.

இதே பகுதியில் உற்பத்தி யாகும் வைகை ஆற்றினால் இப்பகுதி விவசாயிகளுக்கு எந்த பயனும் இல்லை. கடந்த இரண்டு ஆண்டுகளாக நீர் பிடிப்பு பகுதிகளில் போது மான மழை பெய்யாத காரணத்தால் வைகை ஆறு வறண்டு காணப்படுகிறது. கடந்த சில நாட்களுக்கு முன்பு பெய்த மழையின் காரணமாக வைகை ஆற்றில் நீர்வரத்து ஏற்பட்டு குறுகிய நாட் களுக்குள் வறண்டுவிட்டது.

<u>நிலத்தடி நீர்</u>

2 ஆண்டுகளாக தொடர்ந்து ஏற்பட்டு வரும் வறட்சி காரண மாக கடமலை-மயிலை ஒன்றி யத்தில் நிலத்தடிநீர் அதல பாதாளத்திற்கு சென்று விட்டது. இதன் எதிரொலியாக விவசாய பணிகள் அடியோடு முடங்கிவிட்டது. இதில் ஒருபகுதியாக கடமலை- மயிலை ஒன்றியத்தில் பல் வேறு பகுதிகளில் போது மான தண்ணீர் இல்லாததால் தென்னை மரங்கள் முற்றிலும் கருகிவிட்டது.

பல ஆண்டுகள் வளர்த்த மரங் களை காப்பாற்ற முடி யாமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர். விவசாயத் திற்காக அமைக்கப் படும் ஆழ்துளை கிணறு களிலும் தண்ணீர் இல்லை. எனவே முற்றிலும் விவசாய பகுதியான கடமலை-மயிலை ஒன்றி யத்தில் ஆண்டின் சில மாதங் கள் நீர்வரத்து உள்ள வைகை ஆற்றில் ஆங்காங்கே தடுப் பணைகளும், நிலத்தடி நீரை பெருக்க தேவையான நடவடிக்கையும் எடுக்க வேண்டும் என்று இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத் துள்ளனர்.